திரு. ந. தருமலிங்கம் : லூப் என்பதற்கு சரியான பொருள் என்ன ? அதற்குத் தமிழ்ச் சொல் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கனம் உறுப்பினர் அவர்களுக்கு நெருங்கிய நட்புடைய மருத்துவரிடத்திலே கேட்டால் சுவையான தகவல்கள் எல்லாம் கிடைக்கும்.

Director of Medical Education

*135 *Q.*—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal to abolish the post of Director of Medical Education : and

(*b*) if so, its present stage ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ஏ. எம். ராஜா : தலைவர் அவர்களே, டைரக்டர் ஆப் மெடிகல் எஜுகேஷன் மருத்துவக் கல்வியை மட்டும் வைத்துக் கொண்டு, ஆஸ்பத்திரி நிர்வாகங்களை யெல்லாம் டைரக்டர் ஆப் மெடிக்கல் சர்வீஸ் நிர்வாகம் செய்கிற நிலைமையைமாற்றி இரண்டையும் மீண்டும் இணைப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கொள்கைபற்றிய கேள்வி. எனவே இப்பொழுது பதில் கொடுப்பதற்கு இல்லை.

திரு. மா. இராசாங்கம் : தலைவர் அவர்களே, இப்பொழுது இருக்கிற மருத்துவக் கல்வி இயக்குநருக்குக் கொடுக்கப்படுகிற சம்பளம் என்ன ? எப்பொழுது நியமிக்கப்பட்டார், அவருடைய வயது என்ன என்ற விவரங்களை அறிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : 1966-ம் வருடம் ஜூன் மாதம் 1-ம் தேதியிலிருந்து 1968-ம் வருடம் அக்டோபர் மாதம் 4-ஆம் தேதி வரை அவர் கான்ட்ராக்ட் பேஸிஸில் நியமிக்கப்பட்டிருக்கிறார் அவருக்கு பிக்ஸ்ட் பே ரூபாய் 1,500, நான் பிராக்டீஸ் அலவன்ஸ் ரூபாய் 400 கொடுக்கப்படுகிறது. அவருடைய வயது 59. அவருடைய பிறந்த தேதி 1908-ம் வருடம் மார்ச் மாதம் 29-ம் தேதி.

திரு. செ. பாலசுப்பிரமணியன் : டைரக்டர் ஆப் பப்ளிக் ஹெல்த், டைரக்டர் ஆப் மெடிகல் சர்வீஸஸ் இரண்டிற்கும் ஒரே டைரக்டராகப் போடுவதாக அரசாங்கம் பரிசீலித்ததே, அதன் மேல் என்ன முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இது மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லாத கேள்வி. தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு. கரு. சிமைச்சாமி : மருத்துவக் கல்லூரி இயக்குநர் திறமை வாய்ந்தவர்களாகத் தான் போடுகிறார்கள். ஆனால், அவர் மருத்துவக் கல்லூரி இயக்குநராகப் போனவுடனே அவருடைய திறமை எல்லாம் பயன்படுவது இல்லை, அட்மினிஸ்ட்ரேடிவ் விஷயத்தில் எப்படி மாற்றுவது, உயர்த்துவது போன்ற விஷயங்களிலே ஈடுபடுவதால், அவர்களுடைய திறமை மக்களுக்குப் பயன்பட முடிவதில்லை. ஆகையால், அதற்கு ஐ.ஏ.எஸ். ஆபீஸர்களைப் போடுவதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தற்போது அப்படி ஒன்றுமில்லை.

1967 ஜூலை 1]

திரு. சி. கோவிந்தராசன் : டைரக்டர் ஆப் மெடிக்கல் எஜுகேஷன், டைரக்டர் ஆப் மெடிக்கல் சர்வீசஸ் என்று இருவர்கள் இருப்பதால் இருவருடைய அலுவல்களும் வரையறுக்கப்படாத காரணத்தாலே நிர்வாகத்திலே காலதாமதம் ஏற்படுகிறதாகத் தகவல் வந்திருக்கிறதா, அப்படியிருந்தால் ஒவ்வொருவருக்கும் என்ன என்ன அலுவல்கள் என்பதை திட்டவட்டமாக வரையறுத்து நிர்வாகக் காரியங்களைச் சீக்கிரமாகச் செய்வதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : காலதாமதம் ஆவதாகச் சொல்வது சரியல்ல. குறிப்பாக, ஸ்பெஸிபிக்காகச் சொன்னால் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ந. வீராசாமி : முன்பு இருந்த அரசாங்கத்திற்கும், டைரக்டர் ஆப் மெடிக்கல் சர்வீஸஸுக்கும் ஏற்பட்ட தகராறு காரணமாக, டைரக்டர் ஆப் மெடிக்கல் சர்வீஸஸுக்கு இருக்கின்ற அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டுமென்ற எண்ணத்தில், டைரக்டர் ஆப் மெடிக்கல் எஜுகேஷன் என்ற அதிகாரி நியமிக்கப்பட்டாரா ? இந்தப் பதவியை எடுத்துவிடுவதற்கான உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அது கனம் உறுப்பினருடைய கருத்து. பதில் ஒன்றும் இல்லை.

பஞ்சாயத்து யூனியன் மருந்தகங்கள்

*136 வினா.—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மதிப்பிற்குரிய பொதுச் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தாத கூட்டு மன்றப் பகுதிகளில் உள்ள அரசாங்க டிஸ்பென்ஸரிகளை ஆரம்பச் சுகாதார நிலையங்களாக மாற்றும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : இல்லை என்றால், இனிமேலாவது அப்படி மாற்றும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபோன்ற உத்தேசம் இப்பொழுது இல்லை.

திரு. டி. எஸ். ஆதிமூலம் : பிரைமரி ஹெல்த் சென்டர் என்பது ஏதோ பிரமாதமாக இருக்கிறது, ரெகுலர் டிஸ்பென்சரி போன்று மாற்றப்பட்டு பெரிய வசதிகள் எல்லாம் கிடைக்கின்றன என்று வெளியிலேதான் சொல்லப்படுகிறதே தவிர, அது தவறான முறையில் தான் சொல்லப்படுகிறதேயொழிய அது நடைமுறையில் பிரயோஜனம் இல்லை. ஏதோ ஆம்புலன்ஸ் மாதிரி அவர்களுக்கு ஜீப் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை வைத்துக் கொண்டு அங்கே இருக்கிற மருத்துவர்கள் சுகவாசிகளாக இருக்கிறார்கள். ஆகவே, இந்தத் திட்டத்தைக் கூடுமான வரையில் கைவிடுவதற்கு சர்க்கார் யோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனம் உறுப்பினர் அவர்களுடைய கருத்து சரியல்ல. பிரைமரி ஹெல்த் சென்டர்கள் நல்ல முறையில் நடத்தப்படுகின்றன. இந்தத் திட்டத்தினை கிராமப் புறங்களிலே விரிவுபடுத்துவதற்கும், நல்ல மருத்துவ வசதிகளைச் செய்துகொடுப்பதற்கும் ஏற்பாடு செய்கிற நிலைமை இருக்கிறது.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவரவர்களே, புதிதாக ஏற்படுத்தப்பட்ட பிரைமரி ஹெல்த் செண்டர்களில் டாக்டர்கள் இல்லை, ஹெல்த் விஸிட்டரும் இல்லை, ஜீப் கொடுப்பது இல்லை, இப்படிப்பட்ட குறைகளை நீக்குவதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா ?